**10.1 பணியமைப்பு – பேரூராட்சிகள் துறை – பேரூராட்சிகளில் வளர்ச்சிப் பணிகளை செயல்படுத்த தனியாக பொறியாளர் பிரிவு ஒன்றை ஏற்படுத்துதல் வெளியிடப்படுகிறது.**

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

அரசாணை (நிலை) எண். 99 நாள். 29.04.1997

படிக்கப்பட்டது :

1. பேரூராட்சிகள் இயக்குநரின் நேர்முகக் கடிதம் எண். 14078/96 இ3, நாள்: 11.10.96 மற்றும் 10.01.97
2. பேரூராட்சிகள் இயக்குநரின் கடித ந.க.எண். 3279/97 அ6 நாள் : 21.2.97 மற்றும் 18.3.97

**ஆணை :**

1920ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்கீழ் பேரூராட்சிகள் துறை 1.6.94 முதல் இயங்கி வருகிறது. அதற்கு முன்னர் பேரூராட்சிகள், 1958ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் கீழ் இயங்கி வந்ததால் பேரூராட்சிகளால் செயல்படுத்தப்படும் வளர்ச்சிப் பணிகளுக்கு சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியப் பொறியாளர்களின் சேவையைப் பயன்படுத்தி வந்தன. மேலும், நிதி வசதியுள்ள பேரூராட்சிகள் அதிக அளவில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும் சூழ்நிலையில் அப்பேரூராட்சிகளுக்கென மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதியுடன் உதவிப் பொறியாளர் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டு அப்பணியிடங்களில் நெடுஞ்சாலைத் துறையின் மேற்பார்வை பொறியாளர் அல்லது கோட்டப் பொறியாளர்களால் அவர்களின் அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதியில் மாற்றுப்பணி அடிப்படையில் குறிப்பிட்ட காலத்திற்கு இளநிலைப் பொறியாளர்கள் நியமிக்கப்பட்டனர். அதன்படி தற்போது 38 இளநிலைப் பொறியாளர்கள் பணியாற்ற வருகின்றனர். இத்துடன் 26 பணி மேற்பார்வையாளர்களும் பேரூராட்சிகளில் பணியாற்றி வருகின்றனர்.

2. நடப்பு நிதியாண்டில் பேரூராட்சிகளுக்கு சுமார் 35.00 கோடி ரூபாய் அளவிற்கு பல்வேறு வேலைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியுதவியைக் கொண்டு பேரூராட்சிகளில் செயல்படுத்தப்பட உள்ள பல்வேறு வளர்ச்சிப் பணிகளை நல்ல முறையிலும் காலதாமதமின்றியும் செயல்படுத்த பேரூராட்சித் துறைக்கென தனியாக ஓர் பொறியியல் பிரிவை ஏற்படுத்த பேரூராட்சிகள் இயக்குநர் அரசுக்கு செயற்குறிப்பு ஒன்றை அனுப்பியுள்ளார். அதில் பேரூராட்சித் துறையில் தற்போது மாற்றுப்பணி அடிப்படையில் பணிபுரிந்து வரும் நெடுஞ்சாலைத் துறையைச் சேர்ந்த 38 இளநிலைப் பொறியாளர்கள் மற்றும் 26 பணி மேற்பார்வையாளர்களுடன் கூடுதலாக 52 இளநிலைப் பொறியாளர்களையும் 14 உதவி செயற்பொறியாளர்களையும் பணியமர்த்தவும் இவர்களை நெடுஞ்சாலைத்துறை, பொதுப்பணித் துறை மற்றம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆகியவற்றிலிருந்து மாற்றுப்பணி அடிப்படையில் நியமனம் செய்யலாம் என்றும் அவர் பரிந்துரை செய்துள்ளார். இந்த 14 உதவி செயற்பொறியாளர்களை அவர் குறிப்பிட்ட 14 தலைமை இடங்களில் பணியமர்த்தலாம் என்றும் மேற்பார்வையாளர்கள் மற்றும் இளநிலைப் பொறியாளர்கள் குறிப்பிட்ட எண்ணிக்கை கொண்ட பேரூராட்சிகள் அடங்கிய தொகுதியின் அடிப்படையில் அந்த தொகுதிக்குட்பட்ட, நிதிநிலை நன்றாக உள்ள பேரூராட்சியில் நியமனம் செய்யப்படலாம் என்றும் பேரூராட்சிகள் இயக்குநர் மேலும் தெரிவித்துள்ளார். அவர்களுக்கு முதலில் பணியமர்த்தப்படும் பேரூராட்சிகளிலிருந்து சம்பளம் வழங்கிவிட்டு பின்னர் அச்செலவினை அத்தொகுதிக்குட்பட்ட பேரூராட்சிகள் நிதியிலிருந்து அவற்றில் மேற்கொள்ளப்படும் பணிகளின் அடிப்படையில் ஈடு கட்டலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். இக்கூடுதல் பணியிடங்களை ஏற்படுத்துவதால் ஆண்டொன்றுக்கு ரூ. 80.43 இலட்சம் செலவு பிடிக்கும் என்றம் பேரூராட்சிகள் இயக்குநர் தெரிவித்துள்ளார். மேற்பார்வையாளர், இளநிலைப் பொறியாளர் மற்றும் உதவி செயற் பொறியாளர் ஆகியோருக்கு நகராட்சிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவுகோலின்படி பணிகளுக்கான மதிப்பீடுகள் தயாரித்தல், தொழில்நுட்ப அனுமதி அளித்தல், பணிகளை அளவிடுதல் போன்ற பணிகளை ஒதுக்கலாம் என்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. பேரூராட்சிகள் இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு நன்கு பரிசீலனை செய்தது. பேரூராட்சிகளுக்கென தனியாக பொறியாளர்கள் இருந்தால்தான் பேரூராட்சிகளில் செயல்படுத்தப்படும் வளர்ச்சிப்பணிகள் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடிக்கப்பெற்று அதன் பயன்கள் பொது மக்களுக்கு சென்றடைய ஏதுவாகும். இத்துறைக்கென தனியாக பொறியாளர்கள் இருந்தால் தான் அவர்களை இத்துறையின் அலுவலர்களால் கட்டுப்படுத்தி பணிகளை நல்லமுறையில் செய்து முடிக்க ஏதுவாக இருக்கும். பேரூராட்சிகள் இயக்குநர் தனது கருத்துருவில் கூடுதலாக 52 இளநிலைப் பொறியாளர் மற்றும் 14 உதவி செயற்பொறியாளர்கள் பணியிடங்களை ஏற்படுத்த கோரியுள்ளார். பேரூராட்சிகளில் தற்போது 26 பணி மேற்பார்வையாளர்களுடனும் 38 இளநிலைப் பொறியாளர்கள் பணிபுரிந்து வருவதை கருத்தில் கொண்டும் சில மாவட்டங்களில் பேரூராட்சிகளில் இதுபோன்ற பணியிடங்கள் ஏதும் இல்லாத நிலையினை கருத்தில் கொண்டும் தற்போது, கூடுதலாக 29 இளநிலைப் பொறியாளர் மற்றும் 10 உதவி செயற்பொறியாளர் பணியிடங்கள் மட்டும் ஓராண்டு காலத்திற்கு ஏற்படுத்தலாம் என்று அரசு கருதுகிறது.

4. மேற்கூறிய சூழ்நிலையில் பேரூராட்சிகள் இயக்குநரின் செயற்குறிப்பின்மீது அரசு கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:

i) பேரூராட்சி வளர்ச்சிப் பணிகளை செயல்படுத்த தற்போதுள்ள 26 பணி மேற்பார்வையாளர்கள் மற்றும் 38 இளநிலைப் பொறியாளர்களுடன் கூடுதலாக ரூ. 1640–60–2600–75–2900 என்ற ஊதிய ஏற்றமுறையில் 29 இளநிலைப் பொறியாளர்களையும் ரூ. 2200–75–2800–100–4000 என்ற ஊதிய ஏற்றமுறையில் 10 உதவி செயற்பொறியாளர்களையும் ஓராண்டு காலத்திற்கு நியமனம் செய்ய அரசு அனுமதியளிக்கிறது.

ii) இந்த 10 உதவி செயற்பொறியாளர்கள் மற்றும் 29 இளநிலை பொறியாளர்கள் கீழ்க்கண்ட தலைமை இடங்களில் பணியமர்த்தப்பட்டு அவர்களுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள மாவட்டங்களில் உள்ள பேரூராட்சிகளில் நடைபெறும் வளர்ச்சிப் பணிகளுக்கு அவர்கள் பொறுப்பு ஏற்பார்கள்.

| உதவி செயற் பொறியாளர்களின் தலைமை இடம் | கூடுதலாக நியமனம் செய்யப்படும் இளநிலைப் பொறியாளர்களின் எண்ணிக்கை | மாவட்டங்கள் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. காஞ்சிபுரம் | – | (1) அண்ணா |
| | | (2) எம்.ஜி.ஆர். |
| 2. வேலூர் | – | (1) வடஆற்காடு அம்பேத்கார் |
| | | (2) திருவண்ணாமலை சம்புவராயர் |
| | | (3) தர்மபுரி |
| | | (4) தென்னார்காடு வள்ளலார் |
| | | (5) விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் |
| 3. கோயம்புத்தூர் | – | (1) சேலம் |
| | | (2) இராஜாஜி |
| | | (3) கோயம்புத்தூர் |
| 4. ஈரோடு | 2 | (1) பெரியார் |
| | | (2) நீலகிரி |
| 5. தஞ்சாவூர் | 5 | (1) தஞ்சாவூர் |
| | | (2) நாகை காயிதே மில்லத் |
| | | (3) ஏ.டி. பன்னீர் செல்வம் |
| 6. திருச்சிராப்பள்ளி | 2 | (1) திருச்சிராப்பள்ளி பெரும்பிடுகு முத்தரையர் |
| | | (2) பெரம்பலூர் – திருவள்ளூர் |
| | | (3) கரூர் தீரன் சின்னமலை |
| | | (4) புதுக்கோட்டை |
| 7. மதுரை | 4 | (1) மதுரை |
| | | (2) திண்டுக்கல் மன்னர் திருமலை |
| | | (3) வீரன் வைகை அழகுமுத்து |

| (1) | | (2) | (3) |
|---|---|---|---|
| 8. | மானாமதுரை | 3 | (1) இராமநாதபுரம் |
| | | | (2) காமராஜர் |
| | | | (3) பசும்பொன் முத்துராமலிங்க தேவர் |
| 9. | திருநெல்வேலி | 5 | (1) திருநெல்வேலி கட்டபொம்மன் |
| | | | (2) சிதம்பரனார் |
| 10. | நாகர்கோவில் | 8 | (1) கன்னியாகுமரி |

மேற்படி உதவி செயற்பொறியாளர்களின் அலுவலகங்கள் அந்தந்த தலைமையிடங்கள் உள்ள மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகங்களில் இயங்கும்.

iii) இவர்களுக்கான ஊதியம் மற்றும் இதர படிகளுக்காகும் செலவினை பேரூராட்சிகளே அங்கு நடைபெறும் பணிகளுக்கேற்ப விகிதாச்சார அடிப்படையில் பேரூராட்சிகளின் நிதியிலிருந்து ஏற்க வேண்டும்.

iv) புதியதாக ஏற்படுத்தப்படும் இளநிலைப் பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர்களை மாற்றுப் பணியின் (Deputation) அடிப்படையில் நகராட்சி நிர்வாகத் துறையில் தேவைக்கு அதிகமான அளவில் பணிபுரிபவர்களை கொண்டு நிரப்பப்பட வேண்டும்.

5. அனைத்து பேரூராட்சிகளிலும் செயல்படுத்தப்படும் பணிகளக்கான மதிப்பீடுகள் தயாரித்தல், தொழில் நுட்ப அனுமதியளித்தல் மற்றும் செய்து முடிக்கப்பட்ட பணிகளை அளவீடுதல் மற்றும் அளவு சரிபார்த்தல் போன்றவற்றில் கீழ்க்காணும் நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

i) மேற்பார்வையாளர், இளநிலைப் பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் ஆகியோர் நகராட்சி நிர்வாகத் துறையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவுகோலின்படி பேரூராட்சிப் பணிகளுக்கான மதிப்பீடுகள் தயாரித்தல், தொழில் நுட்ப அனுமதி அளித்தல், பணிகளை அளவீடுதல் மற்றும் அளவு சரிபார்த்தல் போன்ற அதிகாரங்களைப் பெற்றிருப்பார்.

ii) நகராட்சி நிர்வாகத் துறையில் உள்ள அளவுகோலின்படி செயற்பொறியாளர் அளவில் மதிப்பீடு அங்கீகரிக்கப்பட வேண்டிய பேரூராட்சிப் பணிகளுக்கு, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்தில் உள்ள செயற்பொறியாளர் (அல்லது) அருகாமையில் உள்ள தேர்வுநிலை அல்லது சிறப்புநிலை நகராட்சிகளில் பணிபுரியும் செயற்பொறியாளர்களின் அனுமதி பெறப்பட வேண்டும்.

iii) கண்காணிப்பு பொறியாளர் நிலையில் அங்கீகரிக்கப்படவேண்டிய மதிப்பீடுகளுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்தில் உள்ள கண்காணிப்பு பொறியாளரின் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

6. தற்போதுள்ள பணி மேற்பார்வையாளர் மற்றும் இளநிலைப் பொறியாளர்களோடு கூடுதலாக பணியமர்த்தப்பட உள்ள 29 இளநிலைப் பொறியாளர்களை எந்தெந்த பேரூராட்சிகளில் பணியமர்த் வேண்டும் என்பது குறித்து பேரூராட்சிகள் இயக்குநரால் ஆணைகள் வெளியிடப்படும்.

7. நகராட்சி நிர்வாகத் துறையிலிருந்து மாற்றுப்பதவி அடிப்படை பேரூராட்சிகள் துறையில் பணிபுரிய உள்ள பொறியாளர்களுக்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள் குறித்து (Terms & Conditions) தனியாக ஆணை வெளியிடப்படும். இதற்கான வரைவு விதிமுறைகள் மற்றும் வரையறைகள் குறித்து நகராட்சி நிர்வாக இயக்குநருடன் கலந்தாலோசித்து பின்னர் அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்குமாறு பேரூராட்சிகள் இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணையினை அனைத்து பேரூராட்சி செயல் அலுவலர்களுக்கும் தெரிவிக்கும்படி பேரூராட்சிகள் இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இந்த ஆணை நிதித் துறையின் அ.சா.கு.எண். 30528/சிஎம்பிசி/97–1, நாள்: 14.4.97 மூலம் இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எஸ். மாலதி**

அரசு செயலாளர்